இருந்த எஸ்டிமேட் தொகையைவிடக் குறைத்திருக்கிறார்களா? இப்போதைய எஸ்டிமேட் தொகை எவ்வளவு? இந்த வேலை எப்போது ஆரம்பிக்கப்படும், எப்போது முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எஸ்டிமேட் 25 லட்சம் ரூபாய். டெண்டர் கோரப்பட்டிருக்கிறது. **Last date for receipt of tenders 26—3—75** அதற்குள் அரசுக்கு வந்திருக்க வேண்டும் ; இன்னும் வரவில்லை. வந்தவுடன் பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

சோலையார்பேட்டையில் பயணியர் மாளிகை.

*** 607.** வினா—திரு. ஜி. ராமசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) சோலையார்பேட்டையில் பயணியர் மாளிகை கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, ஜோலார்பேட்டை ஒரு முக்கியமான இரயில் சந்திப்பு இடமாக இருக்கிறது. ஆகவே, அங்கு இப்போது இல்லை என்றாலும் அடுத்தாண்டிலாவது பயணிகள் விடுதி கட்டப்படுமா ? ஆற்காட்டிலும் பை பாஸ் ரோடு போகும் இடத்தை அமைச்சரவர்கள் பார்த்திருக்கிறார்கள். அங்கும், ஜோலார்பேட்டையிலும் ட்ராவலர்ஸ் பங்களா கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது ஜோலார்பேட்டை பற்றிய கேள்வி. அங்கு இப்போது தேவையில்லை என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

PROCUREMENT OF PADDY.

***608.** Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Government has proposed a paddy levy on the land owner and the tenant making them jointly and severally responsible for the levy ; and

(*b*) if so, the details thereof ?